ஸ்ரீ:
ஸ்ரீமதே இராமானுஜாய நம:
ஸ்ரீமத் அநந்தார்ய மஹாகுரவே நம:
ஸ்ரீமத் வரவரமுனயே நம:



ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன்
அருளிச் செய்த

# சரமச்லோகச் சுருக்கு

**ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்**

http://www.acharya.org

ஶ்ரீ:
ஶ்ரீமதே இராமானுஜாய நம:

# சரமச்லோகச் சுருக்கு

## தேசிகர் தனியன்

ராமாநுஜ தயாபாத்ரம் ஜ்ஞாந வைராக்ய பூஷணம் |
ஶ்ரீமத் வேங்கடநாதார்யம் வந்தே வேதாந்ததேசிகம் ||

சீரொன்று தூப்புல் திருவேங்கடமுடையான்
பாரொன்றைச் சொன்ன பழமொழியுள் - ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு

## சரமச்லோகச் சுருக்கு

கல்லாரகலும் கருமமுஞானமுங்காதலும், மற்
றெல்லாநிலைகளுக்கேற்ப விதித்தகிரிசைகளும்
வல்லார்முயல்க வலியிழந்தாரென்றனைத்தொழுகென்று
எல்லாத்தருமமுரைத்தவன் இன்னடிசேர்ந்தனமே (1)

வெறுமையுணர்ந்ததுமுன்னிட்டு வேறங்கமில்லையெனக்
குறியவனின்னறவெட்டக் குறித்திடுங்கோணைதுறந்து
உறுமயனத்திரமென்னப் பொறாநிலையோர்ந்திட, ஓர்
அறநெறியன்றுரைத்தான் அழியாவறமாயினனே (2)

வாரிதிவிட்டு மலர்மகளோடு மதுரைவந்து
பாரதவெஞ்சமர் பார்மகள்பாரஞ்செகவுகந்து
சாரதியாய்முன்புதூதனுமாய்த் தளருன்விசயன்
தேரதில்நின்று, அவனைத்தேற்றினான் திறமாயினமே (3)

தன்னருளாற்பெருஞ்சாதனம் சாதகனென்றிவற்றைத்
தன்னுடனெண்ணுதல்நீங்கத் தனித்தொருசாதனமாய்த்
பொன்னருளோடுமப்பூமகளோடும் புகழநின்ற
இன்னுரையீசனையே ஏகமெண்ணவிசைந்தனமே (4)

ஊனிலிணைத்துழல்விக்கும் வினைக்கடலுள்விழுந்த
யானெனதானகுணங்கள் எனக்கிசைநல்வழியும்
தானுதவித்தனைத்தந்திடநின்ற தனிக்கருமம்
நானினிவேறோர்பரம் நணுகாவகைநல்கியதே (5)

கடுவினைநாம்பெரும்பேற்றைத் தகைந்தமைகண்டு,நம்மேல்
தொடைவிலகாமலிசைந்து ஒருகாலந்துணிவுடனே
உடைமையடைக்கலமாக அடைக்குமுகப்பதனால்
அடையெனவன்றுரைத்தான் அடைவித்தனன்தன்னடியே (6)

கானென்றவேதங்கள் காக்கும்பரனென்றுகாட்டநின்றோன்
தானென்றறியகிலார்க்கு அறிவிக்குந்தனித்திறலோன்
வானொன்றினாரொடு மானிடனென்னவவதரிப்பான்
நானென்றநந்திருமால் நமைநற்பதஞ்சேர்த்திடுமே (7)

தன்னிலைகாட்டித்தனிமையுகந்து தனித்தகவால்
அன்னிலைதீரவடைக்கலங்கொண்டு அடிசேர்த்திடவே
பன்னிலைமூலவெழுத்திலும் பாண்டவன்தேர்தனிலும்
முன்னிலைகொண்டபிரான் எமைமுன்னிலைகொண்டனனே (8)

காடுகளோநரகோ கடிதாங்கரளத்திரளோ
சூடுவிடாவனலோ தொலையாநிலைநள்ளிருளோ
சாடுபடச்சரணால் அன்றுசாடியசாரதியார்
வீடுசெய்வித்துநமை விடுவிக்கின்றபாவங்களே (9)

சென்றுயர்வானமர்ந்து அவ்வடியாருடன்சேர்ந்திடவே
இன்றெனிலின்று நாளையெனில்நாளை,இனிச்செறிந்து
நின்றநிலை நின்னனைத்துவினையும் நின்விட்டகலக்
கன்றிவிடுப்பனென்றான் கருத்தால்நமைக்காத்திடுமே (10)

அறிவுமனைத்துமிலாவடியோமை அடைக்கலங்கொண்டு
உறவெனநின்றவெலாம் உறவேநின்றதானெமக்காய்
மறுபிறவித்துயர்வாராவகை மனங்கொண்டகலா
இறையவனின்னருளால் எங்கள்சோகந்தவிர்த்தனனே (11)

**சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்**
**ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்**